# என். எம். 'வாக்குமூலம்' பற்றி ஆராய

## ரோயல்கமிஷன் வேண்டும்

### சுதந்திரக்கட்சி செயல்கமிட்டி தீர்மானம்

கொழும்பு, வியாழன் காலி எம் பி டாக்டர் தஹநாயக்கா தூக்கு மேடைக்குப் போகாமல் காப்பாற்றியது தாம் கொடுத்த ஒரு வாக்குமூலமே என்று டாக்டர் என் எம் பெரேரா சமீபத்தில் ஆட்சிமன்றத்தில் தெரிவித்தது பற்றி ஆராய ரோயல் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும் என சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயல்கமிட்டி தீர்மானித்தது.

பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையில் இச்செயல்கமிட்டி கூட்டம் நடைபெற்றது.

காலஞ்சென்ற பிரதமர் எஸ் டபிள்யு ஆர் டி பண்டாரநாயக்காவின் கொலை சம்பந்தமாக அப்போது காபந்து பிரதமராக இருந்த டாக்டர் தஹநாயக்கா தூக்குமேடை செல்லா

[5-ம் பக்கம் பார்க்க]

Registered as a News Paper in Ceylon சதம் 15

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

மலர் 14 இதழ் 29

தபால் பெட்டி எண் 49
போன் 389

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 27 முஹர்ரம் 23 வெள்ளிக்கிழமை (10-3-72)

10 MAR 1972

# புதிய அப்பீல் நீதிமன்றம் செயல்படத் தொடங்கியது

## பிரிவிகவுன்சிலுடனான தொடர்புகளுக்கு முற்று

கொழும்பு, வியா இலங்கையின் புதிய அப்பீல் நீதிமன்றம் இன்று காலை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அப்பீல் நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் திரு ஸி. எஸ். பெர்னாண்டோ இந்த வைபவத்தில் பேசுகையில் பிரிவிகவுன்சிலுடன் இலங்கை நீதிபரிபாலனத்துக்கு இருந்துவந்த தொடர்புகள் இத்துடன் முற்றுப் பெறுகின்றனவென்று குறிப்பிட்டார்.

வழக்கறிஞர்கள் சார்பில் அட்டோர்னி ஜெனரல் திரு வி தென்னக்கோன் கியூ ஸி புதிய நீதிமன்றத்தின் [illegible] சார்ப் பரிபகங்கள்பற்றியும் நீதியரசர்களின் மேலான சேவைத் திறமைபற்றியும் விளக்கிப் பேசினார்.

உயர்நீதிமன்ற பிரதமநீதியரசர் திரு எச் என் ஜி பெர்னாண்டோ, மற்றும் நீதியரசர்கள், மாவட்ட நீதிபதிகள் பிரபல வழக்கறிஞர்கள், நீதியமைச்சர் திரு பீலிக்ஸ் ஆர் டயஸ் பண்டாரநாயக்கா, மக்கள் பிரதிநிதிகள் சபை சபாநாயகர் திரு ஸ்டான்லி திலகரத்தின, மற்றும்பலர் விழாவில் கலந்து கொண்டார்கள்.

நாட்டின் மிக உயர்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று தொடக்கம் செயல்படத் தொடங்கியுள்ளது

(5-ம் பக்கம் பார்க்க)

## 95 தமிழ் திரைப்படங்கள் 1970-71ல் இறக்குமதி

### வர்த்தக அமைச்சர் தகவல்

கொழும்பு வியா 1970-ம் ஆண்டு இந்தியாவிலிருந்து 48 தமிழ்ப்படங்களும் 1971-ம் ஆண்டு 47 தமிழ்ப்படங்களும் இறக்குமதிசெய்யப்பட்டன என்று வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தகஅமைச்சர் திரு. ரி. பி இலங்கரத்தின தெரிவித்தார்.

ஹபரதுவ ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. பிற்னஸ் குணசேகரா கேட்ட கேள்வி ஒன்றிற்கு அளித்த பதிலிலேயே வர்த்தகஅமைச்சர் மேற்கண்ட பதிலை அளித்தார்.

திரு. ரீ பி இலங்கரத்தின தொடர்ந்து கூறுகையில், இந்த இரண்டு வருடங்களிலும் இறக்குமதி செய்யப்பட்ட தமிழ்ப்படங்களுக்கு ஆண்டொன்றுக்கு 13 லட்சம் ரூபா வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டதாகவும், இனிமேல் வெளிநாட்டிலிருந்து திரைப்படங்களை இறக்குமதிசெய்யும் உரிமையை இலங்கை திரைப்படக்கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்படும் எனத் தெரிவித்தார். (நா)

## மிளகாய் இறக்குமதிக்கு ஏப்பிரலிலிருந்து தடை

### 1974ல் அரிசி இறக்குமதியும் இல்லை

கொழும்பு, வியா. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் மிளகாய்க்கு முற்றாக இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் இருந்து இறக்குமதித்தடை விதிக்கப்படும் எனவும், 1974-ம் ஆண்டு ஜனவரியிலிருந்து அரிசி இறக்குமதிக்கும் தடைவிதிக்கப்படும் எனவும் காணி விவசாய அமைச்சர் திரு ஏச். கொப்பேகடுவ தெரிவித்தார்.

இன்று ஆட்சிமன்றத்தில் விவசாயகூட்டுத்தாபன மசோதாபற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு காணி விவசாய அமைச்சர் உரையாற்றுகையிலேயே இத்தகவலை வெளியிட்டார்.

இப்பொழுது இலங்கை பர்மா, சீனா ஆகிய நாடுகளிடமிருந்து அரிசியை இறக்குமதிசெய்து வருவது தெரிந்ததே.

தொடர்ந்து அவர் பேசுகையில் காணி உச்சவரம்பு சட்டம் விரைவில் ஆட்சிமன்றத்தில் தாக்கல்செய்யப்படும் என்றும் தரிசுநிலங்களைப் பொறுப்பேற்கும் சட்டமூலம் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென்றும், கடந்த 6 மாதங்களில் பம்பாய்வெங்காய இறக்குமதித்தடை விதித்ததனால் 2 கோடி 60 லட்சம் ரூபா வெளிநாட்டு நாணயத்தைச் சம்பாதிக்கமுடிந்ததென்றும் தெரிவித்தார். (நா)

வடபகுதி அசைஸ் விசாரணை

## 'மரத்தடியிலும், படிக்கருகிலும் கண்ணாடித் துண்டுகள் இருந்தன'

### சாவகச்சேரி கொலை முயற்சி வழக்கில் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி சம்பவம் நடந்த இடத்தில் கண்ணாடி துண்டுகள் காணப்பட்டன. மரத்தடியிலும், ஸ்ரீமுருகன் ஸ்டோர்ஸ் படிக்கருகிலும் கண்ணாடித் துண்டுகள் காணப்பட்டன. மற்றும் இடங்களில் கண்ணாடித் துண்டுகள் காணப்படவில்லை.

சாவகச்சேரி கொலை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த இன்ஸ்பெக்டர் துரைசிங்கம் மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு மூன்றாவது தினமாக வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஜி ஜீ வீரமந்திரி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் சாவகச்சேரியில் 14-1 70 ல் சிதம்பரநாதன் என்பவர், லெ தியாகமோதி, ச ஆசோகபாலனை கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டுளது.

எதிரி சார்பில் அட்வகேட் ஜே ஏ பி செகுபிம், அட்வகேட் ஏ அமிர்தலிங்கத்தின் உதவியுடனும், புறக்டர் என் அருணாசலத்தின் அனுசரணையுடனும் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் சிவா தியாகராசா நியமிக்கப்பட்டிருந்தார் முடிக்குரிய தரப்பில் அட்வகேட் பெரேரா ஆஜரானார்.

5-ம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாண செக்கியூரிட்டி சேவை

விசேஷ அறிவித்தல்

சேவையிலிருந்து விலக்கப்பட்டவர்களுக்கும் எமது ஸ்தாபனத்துக்கும் எவ்வித தொடர்புமில்லையென்பதை பொதுமக்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் அறியத்தருகின்றோம். மற்றும் எத்தப்பாதுகாப்புச்சேவைக்கும் எந்த விதமான தொடர்பும் எமது ஸ்தாபனத்துடன் இல்லை எமது ஸ்தாபனத்தின் சார்பில் விளம்பரம் சேகரிப்பவர்களிடம் எமது ஸ்தாபன அடையாள அட்டையைக் கேட்கவும்'

அதிபர்
யாழ்ப்பாண செக்கியூரிட்டி சேவை
166 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

4030

சமூகத்தைக் கொலை செய்யும்

## அரசாங்க அதிகாரிகளுக்கு மரணதண்டனை விதிக்கவேண்டுமாம்

கொழும்பு. வியா நாட்டில் ஒருவனைக் கொலை செய்தால் அவனுக்குத் தூக்குத் தண்டனை கிடைக்கிறது. அரசாங்க கூட்டுத்தாபனம் திணைக்களங்களிலுள்ள உயர் அதிகாரிகளின் தவறான போக்கால் ஒரு சமூகமே கொலை செய்யப்படுகிறது. இவ்விதம் ஒரு சமூகத்தையே கொலைசெய்யும் அந்த அதிகாரிகளுக்கு மரணதண்டனை விதிக்கவேண்டுமென அரசாங்கத்தை கம்பளை ஆட்சிமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

ஆட்சிமன்றத்தில் உரையாற்றியபொழுது கம்பளை ஆட்சிமன்ற உறுப்பினர் இவ்விதம் கூறினார். (நா)

நியூ கலிங்கன்
இன்றுவரை
10-3-72 வரை
தினசரி மாலை 4-30
OPERATION
WHITE SHARK

தினசரி 6-30, இரவு 10-00
சனி ஞாயிறு 2-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
கல்யாணப் பரிசு

சாந்தி
(சங்கானை)
வெள்ளி சனி 4-30
FALSES HAME
வயதுவந்தவர்களுக்கு

இரவு 6-15, 9-30
ஞாயிறு 2-30 மெற்னி
ஜெய்சங்கர் - விஜயகுமாரி
நடித்த
காலம் வெல்லும்

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - K R விஜயா
அக்கா தங்கை

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - வரலக்ஷ்மி
நடித்த
ஹரிச்சந்திரா

பவானி
மூளாய்
தினசரி 6-15, இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
A. V. M ராஜன் -
சௌகார் ஜானகி
நடித்த
சக்கரம்

மனோகரா (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — பானுமதி நடித்த
தினசரி 2-30 6-30, 10-00 சனி, ஞாயிறு 10-30
மலைக்கள்ளன்

REGAL (Jaffna)
Daily 10-30 a. m. 3-45, 7-00 and 9-45 p.m.
Gregory Peck and Omar Sharif
in
MACKENN'S GOLD
(Super Panavision and Technicolor)

ராணி (யாழ்ப்பாணம்)
சிவாஜி — ஜெயலலிதா
முத்துராமன் - நாகேஷ்
நடித்த
தினசரி 2-30, 6-30
சவாலேசமாளி
தினசரி காலை 10 30 இரவு 10.00
மாட்டுக்கார வேலன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு காலை 10-00 மணிக்கு
எம். ஜி. ஆர். ★ மஞ்சுளா
பத்மினி - அசோகன் - மனோகர்
சுந்தரராஜன் - தேங்காய் சீனிவாசன் - சோ
நடித்த
சத்யா மூவிஸாரின் ஈஸ்ட்மென் வர்ணச்சித்திரம்
ரிக்ஷாக்காரன்

லிடோ (யாழ்ப்பாணம்)
காலை 10-00 மணிக்கு மட்டும்
எம். ஜி. ஆர் — மஞ்சுளா நடித்த
ரிக்ஷாக்காரன்
தினசரி பி. ப. 3-30 9-30 மணிக்கு
ஹொங்கொங் ஹொட் ஹாபர்
இரவு 6-30 மணிக்கு
★ சிவாஜி — ★ கே. ஆர். விஜயா
ஊட்டிவரை உறவு


## நகரசபை
## பருத்தித்துறை
# கேள்வி விண்ணப்ப அறிவித்தல்

கீழே விபரிக்கப்பட்டுள்ள வேலைகள் செய்வதற்கு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் 21-3-1972 மதியம் பி. ப. 2 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரம்

1. வாகன திருத்தம்
(1) சி எல் 1137 சவர்லட் தண்ணீர் விநியோகிக்கும் லொறியும் தண்ணீர் இறைக்கும் பம்பியும்.
(2) 33 சிற 6359 மசி பெர்கியூசன் டிரக்டர்.
(3) 33 சிறி 2862 மொறிஸ் பெற்றோல் லொறி.
வாகனங்களைக் காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் வந்து பார்வையிடலாம்.

2. பத்திரகாளி கோவில் ஒழுங்கையில் கான் அமைத்தல்
வைப்புப்பணம் ரூபா 50/-ம் திருப்பிக் கொடுக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் ரூபா 5/-ம் கட்டி 21-3-72 பி. ப. 2 மணிவரை கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.
3 கற்கள் இறக்கி, ஊரி தந்துதவுதல்

வ. தாமலிங்கம்,
தலைவர்

நகரசபை, பருத்தித்துறை
நகரசபை அலுவலகம்
பருத்தித்துறை 7-3-72
4029

## மாநகராட்சி மன்றம்
## யாழ்ப்பாணம்
# ஏல விற்பனை

மாநகராட்சி மன்றத்தின் மின்சாரக் களஞ்சியத்தில் இருக்கும் கீழ்க்காணும் பொருட்கள் 16-3-72 காலை 11-00 மணியளவில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். விபரங்களை மின்சாரக் களஞ்சியப் பொறுப்பாளரிடம் அறிந்துகொள்ளலாம்.

1. பாவித்த இயந்திர வண்டி.
2. பலதரப்பட்ட மின்சாரப் பொருட்கள்

க. சிவஞானம்,
பதில் ஆணையாளர்.
மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம், 7-3-72.
4028

விளையாட்டு உபகரணப் அளிப்பாலை, விசா.
கொழும்புத் துறை சன சமூக நிலையத்திற்கு விஜயம் செய்த விளையாட்டு அமைச்சின் வடபகுதி ஆலோசகர் கள் மேற்படி நிலையத்திற்கு ... பந்து, மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கினர்


நாகபூஸ் சினிமா
...
தினசரி 4-30 மட்டும்
சனி ஞாயிறு 10-30
JIGSAW
தினசரி 6-30, 9 45
சனி, ஞாயிறு 2-30
கப்டன் ரஞ்சன்

யாழ். தியேட்டர்
(காங்கேசன்துறை
தினசரி 6-30 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி கணேசன்
ஜெயலலிதா - நாகேஷ்
தெய்வ மகன்


# வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் மின்சார வசதியுடன் கூடிய தனிப்பட்ட வீடு, பின்வளவு வசதியுடன் வாடகைக்கு தேவை. தொடர்பு கொள்ளவும். ஓ. கண்ணும்மா, 385, காங்கேசன்துறை வீதி, யாழ்நகர். 4119

வேலைத்தல ஸ்ரோருக்குப் பொறுப்பாக இருக்கக்கூடிய ஸ்ரோர் கீப்பர் ஒருவர் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவராக இருத்தல் வேண்டும். நேரில் வரவும் வின்ஸ்லோஸ், 149, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், 4135

ரிக்சர் வேலையில் அனுபவமுள்ளவர்கள் தேவை. நற்சான்றுப்பத்திரங்களுடன் வரவும். வின்ஸ்லோஸ் 149, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 4134

### விற்பனைக்கு

நல்ல பழக்க வழக்கமுள்ள வளர்ந்த அல்சேஷன் ஆண் பெண் நாய்கள் விற்பனைக்குண்டு இனவிருத்திக்காக சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட அல்சேஷன் ஆண் நாய்களும் எம்மிடம் உண்டு. க. நடேசன் 15, மனோ மகள் வீதி, அரியாலை. 4058

புலவுடை ஆயர்பாடி ராசிப்புத்தகம், படித்தவர் தோல்வியடையார், செய்யக்கூடியது செய்யக்கூடாதது. விளக்கமாகத் தந்திருக்கிறது. உங்களின் இராசிப்புத்தகம் வாங்கிவிடுங்கள் விலை ரூபா 1/50. ஆயர்பாடி சோதிட நிலையம், தெல்லிப்பழை. 4103

அளவெட்டி மகாஜன பாடசாலைக்கு எதிராக இருக்கும் 5 கடையும், மேல் மாடியும், கிணறும், பிரவேசனங்களும் உள்ள பரஞ்சோதி வாசா என்னும் கட்டடம் விற்பனைக்குண்டு. S. T. ஐயாக்குட்டி, 46, டச்சு ரோட், சாவகச்சேரி. 4141

### சோதிடம்

உங்களுடைய எதிர்காலக் கல்வி, காதல், கல்யாணம், தொழில் பற்றிய செய்திகளைத் திகதிகளுடன் பெறுவதற்குக் காலையில் வாருங்கள். கைரேகை பார்க்க 5/- சாதகம் பார்க்க 7/50 வ. மாணிக்கம், அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 4106

நட்சத்திரம், வயது, பூர்வீகம் பெயர், குறித்து, 15 சத முத்திரையுடன் உறையனுப்பி பதில் பெறவும். இலவசம். மனோகத்துவ ஆருடம், ஞான பண்டித வைத்திய சாலை, அதிபர் ந. சண்முகராஜா, ஜே. பி, கொக்குவில். 4084

### வைத்தியம்

மக்கள் வைத்திய ஆலோசனை இலவசம், அரைச்சலார் ரூபா 150/- திறமான பத்திகளைக் கட்டலாம். விபரங்களுக்கு எழுதவும். சி. கட்பூர் பல்கட்டுமிடம், A. S. சக்கரப்பிள்ளை கட்டிடம், மேல் மாடி, பெரிய கடை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4014

### கல்வி

J. S. C. பரீட்சைக்கான (1) புதிய கணிதம், (2) பொதுவிஞ்ஞானம், (3) ஆங்கிலம். பிற்பகல் 4 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை. இறவுண் போதனா நிலையம். 16, கண்டி வீதி, கண்டிக்குழி, யாழ்ப்பாணம். 4079

விசேட, சிங்கள, ஆங்கில வகுப்புக்கள். மாலை 4 மணி தொடக்கம் 8 மணிவரை ஒவ்வொன்றும் மாதம் ரூ. 15-00. இறவுண் போதனா நிலையம், 16, கண்டி வீதி, கண்டிக்குழி, யாழ்ப்பாணம். 4077

விரைவாக க. பொ. த. (சாதாரணம், உயர்தரம்) முதலிய வகுப்பு மாணவிகட்கு, திருப்பிப் படிப்பிக்கும் வகுப்புகள் பின்வரும் பாடங்களில், பின்வரும் விலாசத்தில் மாஸிர் பட்டதாரிகளால் நடாத்தப்படுகின்றன. தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகம், இரசாயனம், ஆங்கிலம், எண் கணிதம், தையல் வீட்டுப் பணி, சித்திரம் ஒவ்வொரு பாடத்திலும் 25 மாணவிகட்கு மாத்திரம் இடம் உண்டு. உடனே விண்ணப்பிக்கவும். 'பொன்' பாடசாலை, இல 6, மணிக்கட்டடி வீதி, யாழ்ப்பாணம். 4140

## சிவராத்திரி விழாக்கள்

தெல்லிப்பழை, விளாழன் மேலைத்தெல்லி சிவகுருநாத சுவாமி கோவிலில் இம்மாதம் 13-ம் திகதி சிவராத்திரி விழா நடைபெறவிருக்கிறது. தேவாரக் கச்சேரி, இசைக் கச்சேரி, புராண படனம், சொற்பொழிவுகள் முதலிய நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெறும்.

தெல்லிப்பழை மேற்கு பொற்றலைத்தம்பை ஞானவைரவர் சுவாமி கோவிலிலும் இம்மாதம் 13-ம் திகதி சிவராத்திரி விழா நடைபெறும். விசேஷ பூசைகளும் சொற்பொழிவுகளும் புராணபடனம் முதலியனவும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

### சிறப்பு மலர்

சுழிபுரம், விசா
பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினர் சிவசுப்பிரமணிய முருகமூர்த்தி கோவில் தேர்த் திருவிழாவை யொட்டி சிறப்பு மலர் ஒன்றை வெளியிடவுள்ளனர். இதற்கான குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.



வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஆனந்தன்
லீலா நாராயணன்
ஜெயகாந்த் தேவிகா
நடித்த
குத்து விளக்கு

# பாக். போர்க்கைதிகள் தப்பி ஓட முயற்சி:

## இந்தியக் காவலர் சுட்டதில் பலருக்கு உயிர்ச் சேதம்

புதுடில்லி, மார்ச் 9

இந்தியாவில் சிறைவைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் போர்க்கைதிகள் சிலர் தப்பியோட முயற்சி எடுத்துத் தோல்வியடைந்ததாகச் செய்தி ஒன்று கூறுகின்றது.

சிறைச்சாலை ஒன்றிலிருந்து தப்பியோட முயற்சி எடுத்த பாகிஸ்தான் போர்க்கைதிகள் இந்திய காவலர்களின் ஆயுதங்களையும் பறிக்க முயற்சி எடுத்தார்களாம்.

இந்திய சிறைச்சாலை ஒன்றில் பாகிஸ்தான் கைதிகள் கலவரம் விளைவித்துத் தப்பி ஓட முயன்றதாகவும் ஆயுதங்களைக் கைப்பற்ற முயன்றதாகவும் இந்திய பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

இச்சம்பவத்தின்போது இந்திய காவற்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் என்றும் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றன. ஆனால் சேதம் பற்றிய விபரமோ கலவரம் எந்தச் சிறையில் ஏற்பட்டது என்பது பற்றியோ இந்திய அரசு அறிவிக்கவில்லை. இச்சம்பவம் பற்றி விசாரிக்கப்படுவதாகவும் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் இந்திய அரசு தெரிவித்துள்ளது.

### பாகிஸ்தான் கண்டனம்

போர்க்கைதிகள் முகாமில் ஏற்பட்ட சம்பவங்கள் குறித்து இந்திய அரசு தெரிவித்துள்ள செய்தியை பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சு புறக்கணித்திருப்பதுடன் இந்திய அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்துமிருக்கின்றது.

சிறைமுகாமிலிருந்து தப்பியோடவும் ஆயுதங்களைக் கைப்பற்றவும் பாகிஸ்தான் போர்க்கைதிகள் முயற்சி எடுத்தபோது இந்திய காவற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்ததென்றும் இதனை உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் இந்திய அரசு தெரிவித்திருப்பதை பாகிஸ்தான் ஏற்க மறுப்பதாகவும் இந்தியாவின் இந்த நடவடிக்கை மனிதாபிமானமற்ற முயற்சி என்றும் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் திரு. கஸ்தான் அமைச்சுக்கல் கூறியிருக்கிறார்.

இச்சம்பவம் குறித்து பாகிஸ்தான் ஜனாதிபதி அதிர்ச்சியடைந்திருப்பதாகவும் இந்திய அரசுடனான உறவுகள் மாமூல் நிலைக்கு வருவதை இச்சம்பவம் பின்னடையச் செய்துவிடும் என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

இச்சம்பவம் குறித்து விசாரிக்கும்படி செஞ்சிலுவைச் சங்கத்திடம் பாகிஸ்தான் கேட்டிருப்பதுடன் ஐ. நா விடமும் புகார் செய்துள்ளது.

### விசாரிக்க உரிமை

போர்க்கைதிகளை விசாரிப்பதற்கு வங்காளதேச அரசாங்கத்துக்கு உரிமையுண்டென்று சர்வதேச வக்கீலரும் ஜெனிவா பிரகடனத்தை எழுதியவர்களில் ஒருவருமான செக்கோஸ்லாவேக்கிய பிரமுகர் ஒருவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

'தேசிய விசாரணை மன்றம் ஒன்றின் மூலம் போர்க்குற்றவாளிகளை விசாரிக்க அந்த நாடு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு. இதில் வேறெந்த நாடும் குறுக்கிட முடியாது' என்று அந்த நிபுணர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

### காஷ்மீர்

அமெரிக்க அதிபர் நிக்சனும் சீனப் பிரதம மந்திரி சூ-என்லாயும் வெளியிட்ட கூட்டறிக்கையில் காஷ்மீர் பற்றிக் குறிப்பிட்டிருப்பதை இந்திய பிரதம மந்திரி மீண்டும் கண்டித்திருக்கிறார்.

பாகிஸ்தானுடனான பிரச்னைகளை நேரடியாகவே பேசித்தீர்க்க கொள்கையையே இந்தியா விரும்புகிறது. இதில் மற்ற நாடுகள் தலையிடுவதை நாம் விரும்பவில்லையென்று இந்தியப் பிரதம மந்திரி கூறினார்.

மேற்காசியா, வியட்னாம் போன்ற பிரச்னைகள் பற்றி ஒன்றும் சொல்லாமல் காஷ்மீர் பற்றி இவர்கள் கருத்து வெளியிட்டிருப்பது விசித்திரமாயிருக்கிறது என்று இந்தியப்பிரதம மந்திரி கூறியிருக்கிறார்.

## வாழப்பிறந்தநாம் பொருளை தேடிப் பதுக்கலாகாது

—கிரிதாரி பிரசாத்

தாவடி, வியாழன்

"நற்கருமங்களுக்கு நாம் அழைப்பிக்காது போதல் வேண்டும். அடியார் ஒழாத்தில் அன்புமயமாக தபமை மறந்து சிந்திக்கத்தவறும் ஒவ்வொரு மனிதனும் மிருகத்துக்கு சமமாகவே வாழுகிறான். பெருஞ்செல்வ போகத்துக்கும் புழுக்களாகவும் ஆண்டவனைப் பிரார்த்திப்பதில் அர்த்தமேயில்லை. எம்மைப் பீடித்திருக்கும் மிருக சுபாவங்களும் நான் என்ற முனைப்பு ஆகவ ஆசான் எமக்கு அவசியம். குருசிட வழியில் தான் உண்மையைக் காணமுடியும். காமமும் காஞ்சனமும் கபடமும் அற்றவனே குருவாக அமைய முடியும். அத்தோடு கற்பிக்கும் திறனை விட மற்றவனிடத்து அதிகம் நல்லவற்றையும் ஏற்கும் குணம்வேண்டும். உடம்பைக்கொடுத்த தாய் தந்தையிலும் உயிரைக் கொடுத்த பரம் பொருளிலும் ஒழுக்கத்தைக் கொடுத்த ஆசானே குருநாதன் ஆகிறார்"

மேற்கண்டவாறு மாவிட்டபுரம் கொலக்கைப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்ற "குருவும் சீடனும்" என்ற சொற்பொழிவின்போது திரு. கிரிதாரி பிரசாத் கூறினார். திரு. வைரமுத்து தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசியதாவது:

"தமிழனாகப் பிறந்துவிட்டோமென்பதால் தமிழ் நூல்களை மட்டும்படியாது ஞான ஊற்றுக்களான வடமொழி நூல்களையும் நாம் பார்க்கவேண்டும். வடமொழியில் அமைந்துள்ள வேதங்களும் ஆகமங்களும் சமயத்தத்துவங்களையும் தத்துவங்களையும் தாங்கி நிற்கின்றன. பிறந்ததன் பலன் நூல் ஆராய்ச்சியினால் எமக்குக்கிட்டுகிறது. பட்டத்துக்கும் பதவிக்கும் படிப்பதை விட ஆன்ம ஈடேற்றத்திற்காக கற்றல் துணையாகிறது. கடவுளைத் தேடி நாம் எங்கும் அலையவேண்டியதில்லை. பெற்ற தாய், தந்தை, கற்பிக்கும் ஆசான் இவர்களைவிட உலகில் பெரியது எதுவுமில்லை.

தெய்வ மணம் கமழும் தேவார திருவாசகங்களை ஓதி உணராத சைவர்கள் என்று சொல்வதில் எமக்குப் பெருமையில்லை. சத்திய வழிதவறி வாழாமல், சன்மார்க்க நிலையில் நின்று மாறுமன் தன்னிலை உணர்ந்து வாழ்ந்தாலே உத்தம வாழ்வாகிறது. நாளை அழுகின்ற உடலில் புகுந்துள்ள ஆன்மா மலத்தை முற்றாக அழுக்கை பிரம்மசித்துமாயின் அதுவே நிறைவாகிறது. வாழப்பிறந்த நாம் எமக்கென்று பொருளைத்தேடிப் பதுக்காது நல்வழிநாடிப் போகவேண்டும் அன்பும் பண்பும் அகிம்சையும் இருக்கும்வரை எம்மை எமனும் அணுகமுடியாது."

### பந்துக்கள் தருவிக்க ஏற்பாடு

கொழும்பு, வியாழன்

கைப்பந்தாட்டத்துக்குத் தேவையான 1000 பந்துகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்யப்படவிருக்கின்றன. இவைகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி தரும்படி கப்பல் வர்த்தக அமைச்சின் உதவி அமைச்சர் திரு. டி. பி. விக்கிரமசிங்க அரசிடம் அனுமதி கோரியிருக்கிறார் நாட்டில் கைப்பந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான பந்துகளைத்தருவிக்க முயற்சி எடுக்கப்படுகின்றது.

### வைத்தியசாலை

யாழ்ப்பாணம், வெள்ளி

இம்மாதம் 12-ம் திகதி மாலை பல் வைத்தியசாலை ஒன்று யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் திறந்து வைக்கப்படவுள்ளது பேராசிரியர் அ. சின்னத்தம்பியினால் இவ் வைத்தியசாலை திறந்துவைக்கப்படும்.

### கோயம்புத்தூர்

## 2 துணி ஆலைகளை மத்திய அரசு பொறுப்பேற்றது

புதுடில்லி, மார்ச் 9

கோயம்புத்தூரிலுள்ள இரண்டுபெரும துணி ஆலைகளின் நிர்வாகப்பொறுப்பை மத்திய அரசு பொறுப்பேற்றுள்ளது.

கோயம்புத்தூரிலுள்ள சோமசுந்தரம் மில் எடுக்கப்பட்ட துணி ஆலைகளில் ஒன்றாகும். இவற்றை மத்திய அரசு பொறுப்பேற்ற கைவலை தொழில் வளர்ச்சி அமைச்சு வெளியிட்டது. இவ்விரு தொழிற்சாலைகளையும் நிர்வகிக்கும் பொறுப்பை 5 ஆண்டுகளுக்கு கவனிக்குமாறு தேசிய துணி கார்ப்பரேஷனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### பிரிட்டனில் பயில்கிறார்

லண்டன், மார்ச், 9

இலங்கையைச் சேர்ந்த உதவித் தொழில் ஆணையாளர் திரு என். டபிள்யூ. திஸநாயகா தற்போது லண்டன் ரீஜன்ஸ் பார்க்கிலுள்ள தொழில் இலாகாவில், 1½ வார தொழில் நிர்வாக பயிற்சி ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

வெளிநாட்டு தொழில் அலுவலர்களுக்கென விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட இப்பயிற்சி ஒவ்வோராண்டும் நடைபெறுகிறது. கடந்த ஆண்டும் இலங்கையைச் சேர்ந்த மூன்று தொழில் அலுவலர்கள் இவ்விதபயிற்சியில் கலந்துகொண்டார்கள்.

திரு. திஸநாயகா இலங்கையின், தொழில் இலாகாவின் மாவட்ட அலுவலகம் ஒன்றுக்கு பொறுப்பாக உள்ளார்.

'கொழும்புத் திட்டத்தின் கீழ் பிரிட்டிஷ் அரசாங்க தொழில் நுட்ப உதவித் திட்டம் எனக்கு வழங்கும் இப்பயிற்சி மிகவும் பிரயோசனமானது. எனது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ வழி செய்யும்' என்று திரு. திஸநாயகா கூறினார்.

### பட்டம் வழங்கப்படும்

சுன்னாகம்ட, வியா

இலங்கை சித்தாந்த பிரசாரசபை பண்டிதர் இராசிவசுப்பிரமணிய ஐயருக்கு வித்துவ சிரோமணி என்னும் பட்டத்தை வழங்கவுள்ளது.

மேற்படி பட்டமளிப்பு விழா மேமாதம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இளைப்பாறிய நீதிபதி செ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

### மிளகாய்ப் பயிர் பாதிப்பு

சங்கானை, வியாழன்

வலிகாமம் மேற்குப் பிரிவில் மிளகாய்ச் செடிகளை ஒரு புதுவித நோய் பிடிக்கத் தொடங்கியுள்ளது. இதனால் மிளகாய்ப்பயிர் கருகுகின்றன.

இதற்கு பலவித மருந்துகளைக்கல் பல ரூபாய்கள் செலவளித்து தெளித்தும் பயன் இல்லையென அண்மையில் சண்டிலிப்பாயில் தொட்டிலடியில் யாழ் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கில் முறையிடப்பட்டன.

பரீட்சார்த்தமாக புதிய ரக மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை பயன்படுத்தும் பட்சத்தில் இப்பேற்பட்ட நோயிலிருந்து விடுவிக்க ஏதுவாகுமென திரு மாணிக்கவாசகர் விவசாயிகளுக்கு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

### மின்சாரக் கோளாறு

தாவடி, வியாழன்

அண்மையில் சில தினங்களாக தாவடிப்பகுதியில மின்சாரக்கோளாறு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இரவு நேரங்களில் வீதியோரங்களும் வீடுகளும் இருட்டில் மூழ்கி இருப்பதால் களவுகள் அதிகரிப்பதாக இப்பகுதிமக்கள் புகார் செய்துள்ளனர் இங்குள்ள சனசமூகநிலையம், இளைஞர் மன்றம், நாடக மன்றம் முதலியன இதுபற்றி கிராமச் சங்கத்திற்கு கவலை தெரிவித்துள்ளன.

### புதிய சமாதான நீதவான்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண நீதிபரிபாலன மாவட்டத்தில் சமாதான நீதவானாக நியமிக்கப்பெற்ற கதிபுரம் திரு முடுகேசு நாகலிங்கம் (ஓய்வு பெற்ற வித்தியாதரிசி) யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு ஏ. வைத்தியலிங்கம் முன்னிலையில் சமாதான நீதவானாக விசுவாசப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் இளமைக்காலம் தொட்டு சமூக, சமயப்பணியில் ஈடுபட்டுழைத்தவர். இப்போதும் சில சங்கங்களின் தலைவராகவும் காரியதரிசியாகவும் நிர்வாக சபை அங்கத்தவராகவும் இருந்து பொதுசனசேவை, சமயப்பணி கல்விவிருத்தி ஆகிய தொண்டுகளாற்றி வருகின்றார்.

### மேயில் சேக்கிழார் விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

வருகிற மே மாதம் 18ம் திகதி சேக்கிழார் குருபூசையையும் விழாவையும் சிறப்பாகக் கொண்டாட சேக்கிழார்மன்றம் தீர்மானித்துள்ளது.

கடந்த வாரம் சேக்கிழார் மன்றத்தலைவர் திரு. கா. ஸ்ரீகாந்தா தலைமையில் இவ்வருடம் சேக்கிழார்விழா கொண்டாடுவது பற்றிய கூட்டம் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்றது: இம்முறையும் வழமைபோல குருபூசை, மகேசுரபூசை, திருமுறைஓதல், அறிஞர்களின் சொற்பொழிவுகள் ஆகியன இடம்பெறும்.

### கடலை நிரவி விளையாட்டு மைதானம்

அரியாலை, வியா

இப்பகுதிக் கடலின் ஒரு பகுதியை நிரவி ஒரு விளையாட்டு மைதானத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளனர். இக்கிராமத்திற்கு ஒரு விளையாட்டு மைதானம் இல்லாததினால் நீண்டகாலம் அடையும் கஷ்டத்தை எல்லோரும் உணர முடிகிறது

இவ்வாறு கொழும்புத்துறை சனசமூகநிலையத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றை ஆரம்பித்துவைத்து தப்போதைய யாழ் நகர சபை முதல்வர் திரு அல்பிரட் துரையப்பா தெரிவித்தார். விளையாட்டு மைதானத்தின் வடபகுதி ஆலோசனையாளர்களும் இங்கு சென்றிருந்தனர்.

### மகா சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

புங்குடுதீவு கிழக்கு தல்லையபற்று சுந்தரமூர்த்தி முருகமூர்த்தி கோவில் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும், மகாசங்காபிஷேக விழாவும் இன்று நடைபெறவிருக்கிறது.

மாலை ஜாக்கிரத் ஸ்ரீமத் சிவானந்தமுனிவரின் அருளுரையும் அருட்கவி சீ. விநாசித்தம்பியின் 'வள்ளல் கருணை கிரி' என்ற பெருவிழ்பற்றிய கதாப்பிரசங்கமும் இடம் பெறும். இறுதியில் சுவாமி பூந்தண்டிகையில் வீதிவலம் வருவார்.

### கடும் வரட்சி

வவனிபா, வியா.

பெரிய கோமரசங்குளம், ஆசிகுளம் ஆகிய பகுதிகள் மழையின்மையால் வேளாண்மை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் கடும் வரட்சியினால் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

# வலி.கிழக்கு ஆசிரியர் சங்க போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

வலிகாமம் கிழக்கு ஆசிரியர் சங்கம் நடத்திய பேச்சு, சங்கீதப் போட்டி முடிவுகள் வருமாறு:

தமிழ்ப் பேச்சு ஆண்கள்:

கீழ்ப்பிரிவு: கே. காந்தன் உரும்பராய் இந்துக் கல்லூரி, என். அழமலாதேவன் உ இ க என் நேலநேயன் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

மத்தியபிரிவு:

பி. சங்கரராசா புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி. கன். நீதிநாதன் அச்சுவேலி சென். திரேசாக் கல்லூரி, பி. இராசவன் உ இ க.

மேற்பிரிவு: எஸ் ஆனந்த முருகன் சோ க, எஸ் புவனேஸ்வரராசா நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, எம் டேவிட் ராசா உ இ க — என் சோதிலிங்கம் அ இ க.

அதிமேற்பிரிவு: என். நடராத்தினம் அ இ க, கே கந்தசாமி உ இ க, கே சபாரத்தினம் அ இ க.

பெண்கள் கீழ்ப்பிரிவு: கே உமா இடைக்காடு மகாவித்தியாலயம், ஏ சியாமளரூபி உ இ க, எம் ஜெயநாயகி சோ கி க.

மத்தியபிரிவு: எஸ் கோகிலா சோ க, ஆர் இரத்தினவதி உ இ க, ரி சரோஜினி உ இ க.

மேற்பிரிவு: எஸ் நிமலாதேவி அ இ க, கே யோகேஸ்வரி அ இ க, எம் அன்னம்மா அ இ க.

ஆங்கிலப் பேச்சு முடிவுகள்.

கீழ்ப்பிரிவு: எஸ் தேவசேயன் சோ கி க, எஸ் சேதுகாவலன் சோ கி க, ரீ சிவானந்தராசா சோ க.

மத்தியபிரிவு: என் நிரஞ்சன் உ இ க, எஸ் செல்லநாதன் இ ம க, தே சுரேஷ்குமார் சோ கி க.

மேற்பிரிவு: ஆர் செல்வக்குமரன் உ இ க, எஸ் ஸ்ரீரங்கநாதன் உ இ க, ஏ கிருஷ்ணகுமார் உ இ க.

அதிமேற்பிரிவு: கே சபாரத்தினம் அ இ க, எஸ் நடராத்தினம் அ இ க.

பெண்கள்:

கீழ்ப்பிரிவு: என் ஜெயநாயகி சோ கி க, எஸ் பஞ்சரஞ்சிதம் சோ கி க, ஆர் வரதாம்பிகை சோ கி க.

மத்தியபிரிவு: எம் கிரிஷா சோ கி க, ஆர் அருணாஞ்சினி சோ கி க, ஏ பேரிக்கா லோணித்திரா ஆனிசியா அ செ தி க.

மேற்பிரிவு: எஸ் வசந்தா உ இ க, டி. குசியகுமாரி உ இ க, ஆர் ஜெயந்தி சோ கி க - ரி சுருபா சோ க.

சங்கீதம்- தனிப்பாட்டு- ஆண்கள்:

கீழ்ப்பிரிவு:

பு. விபுலானந்தன்-சோ. கி. க. எம் சந்திரசேகரம்- உ இ க. கே சதாகரன்-சோ கி க

மேற்பிரிவு:

எஸ் சந்திரபாலன்- உ இ க, என் சோதிலிங்கம்- அ இ க, எம் ஆட்சயமூர்த்தி- உ இ க,

பெண்கள்: கீழ்ப்பிரிவு- ஏ மங்களம்மா- அ இ க, ஏ வசந்தினி- சோ கி க, ரி செல்வநாயகி- உ இ க

மேற்பிரிவு:

எஸ் செல்வநாயகி-உ இ க எஸ் .செல்லருணா- உ இ க, ஏ யோகேஸ்வரி- உ இ க.

கூட்டுப்பாடல்- ஆண்கள்,

கீழ்ப்பிரிவு:

சோ கி க அ இ க,

கீழ்ப்பிரிவு- பெண்கள்:

சோ கி க அ இ க, உ இ க,

மேற்பிரிவு பெண்கள்!

உ இ க, அ இ க.

## தண்ணீர்ப் பிரச்னை

சங்கானை, வியாழன்

விசுவமடு ஏற்று நீர்ப்பாசன குடியேற்றத் திட்டத்தில் புதிதாகக் குடியேற்றப்பட்ட வாலிபர்களுக்குப் போதிய அளவு தண்ணீர் வழங்கப்படவில்லையாம். இதனால் இவர்கள் உரிய காலத்தில் மிளகாய்ச்செடி நாட்ட முடியாது கஷ்டத்தை அடைகின்றனர். இது பற்றி அரசாங்க அதிபர் மாவட்ட காணி உத்தியோகத்தர் நீர்ப்பாசன பொறியியலாளர் குடியேற்ற உத்தியோகத்தர் ஆகியோருக்கு முறையீடு செய்துள்ளார்கள்.

இதே வேளையில் பழைய குடியேற்றத் திட்டத்தில் உள்ளவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்படும் தண்ணீரை இனி இயந்திரங்களை வைத்து அத்துமீறிக் குடியேறியவர்கள் பாய்ச்சுவதனால் தமது விளைவு கன்று நடுகை தடைப்பட்டுள்ளது எனவும் இதற்கு உடனடியாக ஆவன செய்யுமாறு இவர்களும் பழைய குடியேற்ற வாலிபர்களும் மேற்குறிப்பிட்ட சம்பந்தப்பட்டமேல அதிகாரிகளுக்கு தனித்தனியே தெரிவித்துள்ளனர்.

★ உறுதியானதும்
★ நீடித்து உழைப்பதும்
★ தன்னிகரற்றதுமான
"வைத்திலிங்கம்ஸ்"
இரும்பு - பித்தளை - மர ஸ்குறு ஆணிகளை
நீங்கள் வாங்குவதனால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.
தயாரிப்பாளர்கள்:
என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனக தெரு, கொழும்பு-12
தொலைபேசி: 33143-4
கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 5330

# செய்திச் சுருக்கம்

### ஹோட்டல் பாடசாலை

இலங்கையில் புதிய ஹோட்டல் பாடசாலை ஒன்று ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், சர்வதேசத் தொழில் அமைப்பு ஆகியவற்றின் உதவியோடு விரைவில் நிறுவப்படவிருக்கிறது.

கப்பற் போக்குவரத்து உல்லாசப் பிரயாண அமைச்சு இதற்கான திட்டமொன்றைத் தயாரித்து வருகிறது.

0 0 0

### சமஷ்டிக் கட்சியை...

"இலங்கை சமஷ்டிக் கட்சியை உடனடியாக அரசு இலங்கைத் தமிழ்மக்களின் நலன் கருதித் தடை செய்ய வேண்டும் இது அரசின் கடமையாகும்."

லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் இணைச் செயலாளர் திரு. நா பெ. தருமலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

'புதிய அரசியல் திட்டத்துக்கு எதிராக சமஷ்டிக் கட்சியினர் ஆரம்பிக்கவிருக்கும் சாத்விகப் போராட்டம் ஒரு ரத்தக்களரியாகவே மாறும் என்பதில் சந்தேகமில்லை' எனவும் மேற்படி பத்திரிகைகளுக்கு விடுக்கப்பட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

0 0 0

### மழை வேண்டி பிரார்த்தனை

நாட்டின் பல பாகங்களிலும் தற்போது நிலவி வரும் கடும்வரட்சி நீங்கி மழை பெய்ய வேண்டும் என புத்தளப் பகுதியில் உள்ள கத்தோலிக்க, கிறிஸ்தவ, இஸ்லாமிய, சைவ ஆலயங்கள் யாவற்றிலும் விசேஷ ஆராதனைகள் நடைபெறுகின்றன.

புத்தளப் பகுதியில் கடந்த நான்கு மாதகாலமாக கடும் வரட்சி நிலவுவதால் அப்பகுதியில் உள்ள நீர் நிலைகளெல்லாம் வற்றிவிட்டதால் அங்குள்ள மக்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர்.

0 0 0

### ஏற்றுமதி இறக்குமதி வங்கி

இலங்கையில் ஏற்றுமதி இறக்குமதி வங்கி ஒன்றை விரைவில் அமைப்பதற்கு சட்டமொன்று இப்பொழுது தயாராகின்றது.

இவ்வங்கி அமைக்கப்படுவதன் நோக்கம் பாரம்பரிய மற்ற பல பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களுக்கு உதவி செய்யவும், பெரிய வர்த்தகர்களோடு தொடர்பற்றவர்களுக்கும் சேவை செய்வதுமேயாகும்.

இலங்கை வர்த்தகர்களுக்கு இவ்வங்கி பெரும் உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

நிதியமைச்சர் இந்த வங்கியை நிறுவ நகல் மசோதா ஒன்றைத் தயாரிக்க நிதி அமைச்சின் பொருளாதார ஆலோசகர் டாக்டர் புத்ததாச ஹேவவிதாரணவை தலைமையில் கமிட்டியொன்றை நியமித்துள்ளார்.

0 0 0

### அரிசி கொள்வனவு

நெல் சந்தைப்படுத்தும் சபை அதன் சகல பிரதேச முகாமையாளர்களுக்கும் விவசாயிகள் வழங்கும் எல்லா அரிசியையும் கொள்வனவு செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது

மேலும் சபை கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்த மொத்த அரிசியின் தொகை, இச்சங்கங்களுக்கு அரிசி விற்பனை செய்த விவசாயிகள் தொகை பங்கீட்டுக்கு இந்த அரிசி தகுந்ததா என்ற விடயங்களையும் முகாமையாளர்களிடம் கேட்டுள்ளது.

0 0 0

### காரியாதிகாரி கந்தோர்கள் குட்டிக் கச்சேரிகள்

ஜூலை முதலாம் திகதி முதல் நாட்டிலுள்ள சகல காரியாதிகாரிக் கந்தோர்களும் குட்டிக் கச்சேரிகளாக மாற்றப்படவுள்ளன. இந்தக் கச்சேரிகளில் காரியாதிகாரிகளுக்குப் பதில் உதவி அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்படுவார்கள்.

பொதுமக்களின் நலன் கருதி இந்தக் குட்டிக் கச்சேரிகளுக்குக் கூடிய அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன.

இலங்கைப் பாடசாலை கூடைப்பந்தாட்டம்

# கொழும்பு சென். ஜோசப் சாம்பியன் ஆனது

(நமது விளையாட்டு நிருபர் தேவா)

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான, கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கொழும்பு சென் ஜோசப் கல்லூரி சாம்பியன் வெற்றிக்கிண்ணத்தை தட்டிக்கொண்டது.

கொழும்பு கோஷ்டிகளான சென் ஜோசப் கல்லூரிக்கும், சென் பீற்றரஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சென் ஜோசப் வெற்றி பெற்றது. இப்போட்டி ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை கடும் போட்டியாகவே காணப்பட்டது. இடைவேளையின் போது, சென் பீற்றரஸ் கல்லூரியினர் 36-35 புள்ளிகள் வித்தியாசத்தால் முன்னணியில் நின்றனர்.

இடைவேளையின் பின் சென் ஜோசப் கல்லூரியினரின் ஆட்டம் சிறப்புற்று விளங்கியது. இக்கோஷ்டியின் வீரர்களாவ ராஜும், பத்மநாதனும் தமது கோஷ்டியினருக்கு அடுத்தடுத்து புள்ளிகளை பெற்றுக் கொடுத்தமையினால், சென் ஜோசப் ஆட்ட இறுதியில், கடந்தவருடச் சாம்பியனான சென் பீற்றரஸ் கல்லூரியை 68-59 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்று, சாம்பியன் பட்டத்தை இம்முறை தம்வசமாக்கிக் கொண்டது.

### ஆட்டம் தடைப்பட்டது

கொழும்பு சென் பெனடிக் கல்லூரிக்கும், திருமலை சென் ஜோசப் கல்லூரிக்குமிடையில் 3வது இடத்துக்காக நடைபெற்ற போட்டியில் சென் பெனடிக் கல்லூரியினர் வெற்றிபெற்றனர்.

ஆனால் இப்போட்டி இடைவேளைக்கு முன்பாகவே தடைப்பட்டது. திருமலை சென் ஜோசப் கல்லூரியினருக்கு எதிராக மத்தியஸ்தர்கள் வழங்கிய தீர்ப்பு இப்போட்டி பற்றிய சட்டப் புத்தகத்தில் காணப்படவில்லை என, இக்கோஷ்டியின் விளையாட்டுப் பயிற்சியாளர் வண. பேபியர் மத்தியஸ்தர்களுக்கு எடுத்து காண்பித்த போது, மத்தியஸ்தர்கள் அவரின் வார்த்தை ஏற்க மறுத்துவிட்டனர். இதனால் சென் ஜோசப் கல்லூரியினர் மேற்கொண்டு போட்டியில் பங்குபற்றாமல் இருந்து விட்டனர். இதனையடுத்து மத்தியஸ்தர்கள், சென் பெனடிக் கோஷ்டியினருக்கு வெற்றியென தீர்ப்பளித்தனர். இந்தக் கட்டத்தில் சென் பெனடிக் 22-12 புள்ளிகள் வித்தியாசத்தால் முன்னணியில் நின்றனர்.

மேற்படி இரு கோஷ்டிகளின் ஆட்டத்தை தொடர்ந்து நடத்தும்படி ரசிகர்கள் கூட்டம் பலத்த கரகோஷம் செய்தபடியால், இரு கோஷ்டிகளும் தங்கள் ஆட்டத்தை தொடர்ந்து "சிநேகபூர்வமான" முறையில் ஆடினர்கள். இப்போட்டிக்கு மத்தியஸ்தர்கள் மத்தியஸ்தம் வகிக்க முன்வராததினால், இரு கோஷ்டியின் விளையாட்டுப் பயிற்சியாளர்களான வண கேபியரும் திரு. சுந்தரலிங்கமும் மத்தியஸ்தம் வகித்தனர். வண கேபியர் மத்தியஸ்தம் வகிக்க மைதானத்தினுள் வந்த போது ரசிகர்கள் பலத்த கரகோஷம்செய்து அவரை வரவேற்றனர். இந்தப் போட்டியிலும் சென். பெனடிக் கல்லூரி 65 46 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

நீர் கொழும்பு சென் மேரிஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் 5வது இடத்துக்காக நடைபெற்ற போட்டியில் சென் மேரிஸ் கல்லூரி 65-59 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

இந்த இறுதிநாள் போட்டிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் ராஜன் கதிர்காமர் தம்பதிகள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றி பெற்ற கோஷ்டிகளுக்கு பரிசில்களை வழங்கினர்கள்.

## புங்குடுதீவு மகாவித்தியாலயம் முதலிடம்

ஊர்காவற்றுறை, வியாழன்

ஊர்காவற்றுறை வட்டாரப் பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி புங்குடுதீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

புங்குடுதீவு மகாவித்தியாலய முன்னாள் அதிபர் திரு. கு. வி. செல்லத்துரை கொடியேற்றிவைக்க மகாவித்தியாலய மாணவிகள் தேசிய கீதம் தமிழ்மொழியாக்கத்துப் பாடியதைத் தொடர்ந்து விளையாட்டுக்கள் ஆரம்பமாயின.

அனலைதீவு மகாவித்தியாலயம், நெடுந்தீவு மகாவித்தியாலயம், கரம்பன் மகாவித்தியாலயம், புங்குடுதீவு மகாவித்தியாலயம், எழுவைதீவு முருகவேள் வித்தியாசாலை, நயினாதீவு கணேச வித்தியாசாலை, நயினாதீவு மகாவித்தியாலயம், நாரந்தனை ஆர். சி. பாடசாலை என்பன விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டன. மாணவ மாணவிகள் அணிவகுப்பும் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக திரு. ஒ. கோடிக் யோசேப்பு கலந்துகொண்டார். திருமதி கேரி அன்னு யோசேப் பரிசில் வழங்கினார். வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. சி. நல்லையா தலைமையில் பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது.

இப்போட்டியில் புங்குடுதீவு மகாவித்தியாலயம் மிகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. நெடுந்தீவு மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் நயினாதீவு மகாவித்தியாலயம், நயினாதீவு கணேச வித்தியாசாலை ஆகிய இரு பாடசாலைகளும் சரிசமமான புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தைப் பெற்றுக் கொண்டன.

